

# ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி

## சாராம்சம்


மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
சோஷல் இன்டிகேட்டர்



பெப்ரவரி 2022

# முறைமையியல்

ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி எனும் இந்த ஆய்வானது பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தினைப் பயன்படுத்தி நாட்டின் 25 மாவட்டங்களிலும் நான்கு பிரதான இன சமூகங்களைச் சேர்ந்த (சிங்கள, தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) 1223 பதிலளிப்பவர்களை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இன மக்கள் தொகையைக் கருத்திற்கொண்டு மாதிரி பகிர்வு மேற்கொள்ளப்பட்டது. கொவிட்-19 தொற்றின் விளைவாக எதிர்கொள்ளப்பட்ட பல கட்டுப்பாடுகள் காரணமாக, சோஷல் இன்டிகேட்டரானது (SI) வெளிக்களப்பணியின் போது பதிலளிப்பவர்களைத் தேர்ந்தெடுக்க பனிப்பந்து மாதிரி நுட்பத்தைப் பயன்படுத்தியது.

நேர்காணல்களை நடாத்துவதற்கு பொருத்தமான பதிலளிப்பவர்களைத் தேர்ந்தெடுக்கும் வேளையில் பதிலளிப்பவர்களின் உள்ளூராட்சி (மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை) பிரதேசம், வயது மற்றும் பால் என சில வகைப்பாடுகளை முன்நிபந்தனைகளாகக் கருத்திற் கொள்ளப்பட்டது. அனைத்து நேர்காணல்களும் வெளிக்கள ஆய்வாளர் மற்றும் பதிலளிப்பவர் ஆகிய இருவரினதும் முதலாம் மொழியில் தொலைபேசி ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

களப்பணியினை ஆரம்பிப்பதற்கு முன்னர், வெளிக்கள ஆய்வாளர்களுக்கு ஆய்வு, வினாக்கொத்து மற்றும் வெளிக்கள நுட்பங்கள் குறித்து விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது. வெளிக்கள ஆய்வாளர்களின் முதலாம் மொழியில் கள விளக்கங்கள் நிகழ்த்தப்பட்டன. பிரதான ஆய்வுக்கு முன்னர், வினாக்கொத்தின் உள்ளடக்கம், செல்லுபடியாகும் தன்மை மற்றும் வினாக்களின் வரிசை ஒழுங்கு ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக சோஷல் இன்டிகேட்டர் முன்சோதனை ஒன்றினை நடாத்தியது. பெருந்தொற்று காரணமாகப் பல்வேறு வரையறைகளைக் கருத்திற்கொண்டு, வெளிக்கள ஆய்வாளர்களுக்கான விளக்கமளிக்கும் கூட்டங்கள் ஆராய்வுக் குழுவினரால் சூம் (zoom) வழியல் நேரடியாகவும், பதிலளிப்பவர்களுடனான் நேர்காணல்கள் தொலைபேசி வழியாகவும் நடாத்தப்பட்டன. நாடளாவிய கருத்துக் கணிப்புக்கான களப்பணிகள் 2021, செப்டெம்பர் 19 முதல் அக்டோபர் 16 வரை நடாத்தப்பட்டன. நான்கு முக்கிய இன சமூகங்களைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் என மொத்தம் 62 வெளிக்கள ஆய்வாளர்கள் ஆய்வில் பங்கேற்றனர்.

சேகரிக்கப்பட்ட தரவின் தரத்தை உறுதி செய்வதற்காக மொத்த மாதிரியில் 10% மீள்சரிபார்க்கப்பட்டன. மக்கள் தொகையின் உண்மையான மாவட்டம் மற்றும் இன விகிதத்தை பிரதிபலிக்கும் வகையில் தரவுத்தொகுப்பு மதிப்பிடப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளியியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத் தொகுப்பானது பகுப்பாய்வு செய்யப்பட்டது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கணிப்பீட்டாய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வை மேற்கொள்ள ஆலோசனை உதவிய கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவிற்கு சோஷல் இன்டிகேட்டரின் நன்றிகள். ஆய்வுக் குழுவில் கலாநிதி பிரதீப் பீரிஸ், சகினா மொய்னுதீன் மற்றும் மா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர். தரவுப் பகுப்பாய்வுக்கு ஷஷிக் சில்வா உதவினார். அட்டைப்பட உதவி: செல்வராஜா ராஜசேகர், ஆசிரியர், 'மாற்றம்' இணையதளம் (https://maatram.org)

# சாராம்சம்

## அரசின் செயற்பாடுகள் குறித்த சுருக்கமான விளக்கம்

- ஒட்டுமொத்தமாக பதிலளிப்பவர்களில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என நம்பும் முக்கிய மூன்று காரணிகள் - கொவிட்-19 பரவலைத் கட்டுப்படுத்துவது (30.3 சதவீதம்), வாழ்க்கைச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்துவது (26.1 சதவீதம்) மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வது (25.9 சதவீதம்) என்பவையாகும்.
- பதிலளிப்பவர்களில் கணிசமான பகுதியினர் (67.2 சதவீதம்) கொவிட்-19 நெருக்கடியைத் தணிப்பதில் அமைச்சரவை அமைச்சர்களின் செயல்திறனில் அதிருப்தி அடைந்துள்ளனர். பதிலளிப்பவர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள பொது சுகாதார பரிசோதகர்களின் செயல்திறனில் பெரும்பாலும் திருப்தி அடைந்ததாகத் தெரிகிறது.
- பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையானோர் (72.1 சதவிகித்தினர்) இரசாயன உரங்கள் உடல் நலனிற்கு உகந்ததல்ல என்றாலும், சாத்தியமான தீர்வு கிடைக்கும் வரை இரசாயன உரங்களை ஓரளவிற்குத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர் - பதிலளிப்பவர்களில் 23 சதவீதமானவர்கள் இரசாயன உரங்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிப்பதால், அவற்றை முற்றிலுமாக, உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கின்றனர்.
- பதிலளிப்பவர்களில் கிட்டத்தட்ட 45 சதவீதமானவர்கள், வர்த்தகம் அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பதால் வெளிநாட்டு நிறுவனங்களை நம் நாட்டில் முதலீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கூறுகின்றனர். 37.5 சதவீதமானவர்கள் வெளிநாட்டு நிறுவனங்களின் சுரண்டல் காரணமாக, அரசாங்கம் வெளிநாட்டு முதலீட்டை நாட்டினுள் அனுமதிக்கக்கூடாது என்று குறிப்பிடுகின்றனர்.
- முன்னைய அரசாங்கம் ஆட்சியில் இருந்த காலத்தில் நிகழ்ந்தவற்றுடன் ஒப்பிடும் போது, சட்டம் ஒழுங்கை அமுல்படுத்துகையில் பக்கச்சார்பற்ற தன்மை மற்றும் ஜனாதிபதி, அரசியல் தலைவர்கள், இராணுவம் அல்லது பிற சிவில் பாதுகாப்புப் படைகளை விமர்சிக்கும் சுதந்திரம் போன்றவற்றின் அளவுகள் குறைவடைந்துள்ளதாகப் பதிலளித்தவர்கள் கூறுகின்றனர். பொது வாழ்க்கைத் தரத்தில் சரிவு இருப்பதாகவும் பதிலளிப்பவர்கள் கூறுகின்றனர்.

## அரசாங்கத்தின் உறுதிமொழி குறித்த சுருக்கம்

- பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் (64.1 சதவீதம்) அரசாங்கம் தனது பதவிக் காலத்தில் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது சாத்தியமில்லை என்று கூறுகின்றனர்.
- தற்போதைய ஆட்சி முறையின் கீழ் தேசிய பாதுகாப்பைப் பற்றி சிந்திக்கும் போது, பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் (60.4 சதவீதம்) நாடு உள்நாட்டு பாதுகாப்பு அச்சுறுத்தல்களில் இருந்து அநேகமாக பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுகின்றனர், அதே நேரத்தில் 30 சதவீதமானவர்கள் இதற்கு எதிரான கருத்தைக் கொண்டிருக்கின்றனர்.
- அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்புக்கான திட்டங்கள் தொடர்பில் பதிலளிப்பவர்களுக்கு குறிப்பிட்டளவு தெளிவின்மை இருப்பதைக் காணமுடிகிறது. பதிலளிப்பவர்களில் ஏறக்குறைய நான்கில் ஒரு பகுதியினர், அரசாங்கம் தனது பதவிக் காலத்தில் புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துமா என்பது தங்களுக்குத் தெரியாது என்று குறிப்பிடுகையில், கிட்டத்தட்ட 40 சதவீதத்தினர் புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தாது என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றனர்.

## நிர்வாகத்தின் வடிவம் குறித்த சுருக்கம்

- தேர்தல்களால் அசௌகரியம் அடையாத ஒரு வலுவான தலைவரைக் கொண்டிருப்பதற்கு குறிப்பிடத்தக்க ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது.
- முடிவெடுப்பதில் பொதுமக்களின் பார்வையை பகுப்பாய்வு செய்யும் போது, பெரும்பான்மையானவர்கள் (87.4 சதவீதம்) நாடு தொடர்பான அனைத்து முக்கிய முடிவுகளும் அரசியல்வாதிகளுக்கு மாறாக நிபுணர்களால் எடுக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வது தெளிவாகிறது.
- பதிலளித்த பெரும்பாலானோரில் (76.3 சதவீதம்) அனைத்து முக்கிய முடிவுகளும் மதத் தலைவர்களால் எடுக்கப்பட வேண்டும் என்பதில் உடன்படவில்லை.
- பெரும்பான்மையானவர்கள் (92.2 சதவீதம்) தேர்தல் கொள்கைக்கு ஆதரவாக இருக்கின்றனர்.
- பதிலளிப்பவர்களில் சரியாக பாதிப்பேர் (50.3 சதவீதம்) ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதன் மூலம் பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.
- அரசாங்கத்தில் அரசியல்வாதிகளை விடவும் நிபுணர்கள் (அவர்கள் அரசியலில் தேர்ச்சி பெற்றிருக்காவிட்டாலும் பரவாயில்லை) அதிகம் இருக்கவேண்டும் என்ற கருத்தை பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையினர் (60.7 சதவீதத்தினர்) கொண்டிருக்கின்றனர்.

## இராணுவத்தின் பங்கு பற்றிய சுருக்கம்

- நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 நெருக்கடியைத் தணிக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக இராணுவத்திற்கு பெரும் ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும், நாடு இராணுவத்தால் ஆளப்பட வேண்டுமா என்று பதிலளித்தவர்களிடம் கேட்கப்பட்டபோது, கணிசமான பெரும்பான்மையினர் (70.8 சதவீதம்) கருத்து வேறுபாட்டை கொண்டிருக்கின்றனர்.
- நெருக்கடியான நேரத்தில் உரிய நிறுவனங்களின் அதிகாரத்துவ நடைமுறைகளை தவிர்த்து இராணுவம் பொதுவிடயங்களை கையாள்வதற்கு கணிசமான ஆதரவு உள்ளது என்பது தெரியவருகிறது. இந்தக் கருத்து சிங்கள சமூக பதிலளிப்பவர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படும் அதேவேளை, சிறுபான்மை சமூக பதிலளிப்பவர்கள் மத்தியில் இதற்கு எதிரான கருத்து காணப்படுகிறது.
- தேசிய அளவில், பதிலளிப்பவர்களில் பெரும்பாலானோர் (84.1 சதவீதம்) திருப்தி அடைந்ததாகக் குறிப்பிடுகின்றனர் வெறும் 17.4 சதவீதம் பேர், சிவில் கடமைகளைச் செய்வதற்காக விரிவடையும் பாதுகாப்புப் படைகளின் பங்கில் அதிருப்தி அடைந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

## சமூக நிலைமைகள் குறித்த சுருக்கம்

- வீட்டு வருமானம் குறித்து பதிலளிப்பவர்களில் கணிசமானோர் (75.1 சதவீதம்) குடும்ப வருமானம் மோசமடைந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர் - இதில் முக்கியமாக மலையகத் தமிழ் சமூகம் (63.6 சதவீதம்) இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்த தங்கள் குடும்ப வருமானத்துடன் ஒப்பிடும் போது மிகவும் மோசமாக உள்ளது என்பதைக் குறிப்பிடுகின்றனர்.
- தனிப்பட்ட பாதுகாப்புக் குறித்துப் பதிலளித்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தங்களது தனிப்பட்ட பாதுகாப்பு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததுடன் ஒப்பிடும் போது, மோசமாகிவிட்டதாகக் குறிப்பிடுகின்றனர். மாறாக, சிறுபான்மை இன சமூகங்கள் சார்பாக (முஸ்லிம் சமூகம் 45.4 சதவீதம், தமிழ் சமூகம் 42.7 சதவீதம் மற்றும் மலையக தமிழ் சமூகம் 42.6 சதவீதம்) பதிலளிப்பவர்கள் பெரும்பாலும் தங்கள் பாதுகாப்பு உணர்வு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட மோசமாகிவிட்டது எனக் கூறுகின்றனர்.
- பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் (68.4 சதவீதம்) கொவிட்-19 இனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் விதித்துள்ள விதிமுறைகளை அரசியல் தலைவர்கள் முறையாகப் பின்பற்றவில்லை என்று கூறுகின்றனர்.

## கொவிட் – 19 விதிமுறைகளின் சட்டபூர்வமான தன்மை குறித்த சுருக்கம்

- பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையானோர் (75.1 சதவீதம்) கொவிட்-19 பரவுவதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் விதித்துள்ள விதிமுறைகள் பயனுள்ளதாக இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

## நியாயமான வகையில் நடாத்தப்படுதல் பற்றிய சுருக்கம்

- பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் (கிட்டத்தட்ட 55 சதவீதமானோர்) கொவிட்-19 நெருக்கடியைத் தணிக்க அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட விதிமுறைகள் நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதைக் குறிப்பிடுகின்றனர்.
- காவல்துறை, இராணுவம் மற்றும் சுகாதார அதிகாரிகளால் கொவிட்-19 விதிமுறைகள் செயல்படுத்தப்பட்டபோது மற்றும் உள்ளூர் அளவிலான அரசாங்கத்திடம் இருந்து சேவைகளையோ அரசாங்க மானியங்களையோ பெறும்போது, பெரும்பான்மை சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாறாக அதிக அளவிலான பாகுபாடு அல்லது நியாயமற்ற முறையில் நடாத்தப்படுதல் என்பவற்றை அனுபவித்ததாகக் கூறியவர்களில் பெரும்பாலானோர் சிறுபான்மை இனச் சமூகங்களில் இருந்து பதிலளிப்பவர்கள் என்பது தெளிவாகிறது.
- ஒப்பீட்டளவில், மலையக தமிழ் சமூகத்தைச் சேர்ந்த கணிசமான பெரும்பான்மையான பதிலளிப்பவர்கள் (58.8 சதவீதம்) அரசியல் கட்சி சார்புகளால் அரசாங்க மானியங்களைப் பெறும்போது அவர்கள் நியாயமற்ற முறையில் நடாத்தப்பட்டதாகக் குறிப்பிடுகின்றனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. இது, பொதுக்கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு உறுதிபூண்டுள்ளது.

முகவரி: 6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +94(11)2081384-6
இணையதளம்: http://www.cpalanka.org/

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில்முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், சோஷல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஏராளமான சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.

முகவரி: 6/1B,1/1, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +94112 826 010
இணையதளம்: http://cpalanka.org/survey-research/
மின்னஞ்சல்: sakina@cpasocialindicator.org